மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29–ம் நாள் வியாழக்கிழமை

அ.வ.எண். 123/22

பி.சா.4

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---------------------------------------------------------------------

பெயர்: தங்கராஜ் தேதி : 29.01.26

வயது : த/பெ :சாமி தேவர்

கிராமம் : தொழில் :

மாவட்டம்:

---------------------------------------------------------------------

**<u>29.01.26 சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

13.01.2025 ம் தேதி 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் கொடுத்த புகார் மனுவின் கை நகலினை தாக்கல் செய்கிறேன். அது பி.சா.ஆ 10 ஆகும். 13.01.2025 ம் தேதிய கணிணி வழி ரசீதின் அசலினை தாக்கல் செய்கிறேன். அது பி.சா.ஆ 11 ஆகும்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

வாதி மற்றும் 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1.பி.சா.ஆ 10 மனுவினை முறப்பநாடு காவல் நிலையத்தில் நான் மட்டும் போய் கொடுத்தேன். தாவா சொத்து சம்பந்தமாக என் மனைவிக்காக அந்த மனுவை கொடுத்தேனா என்றால் ஆம். காவல் துறை இது சம்பந்தமாக விசாரித்தார்களா என்றால் ஆம். என் மனைவியிடம் விசாரித்தார்களா என்றால் ஆம். 1, 2 பிரதிவாதிகளிடமும் விசாரித்தார்கள். அந்த விசாரணை அறிக்கை காவல் துறை வசம் இருக்கும் என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் மீது மேற்படி

புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. சத்தம் மட்டும் போட்டார்கள்.

2.நான் சொல்வது போல் 1, 2 பிரதிவாதிகளை காவல் துறையினர் சத்தம் போடவில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ 10 மனுவில் கண்ட சங்கதிகள் பொய்யானவை என்பதால் காவல் துறையினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் நான் பி.சா.ஆ 10 சம்பந்தப்பட்ட விசாரணை கோப்பு ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக புகார் கொடுக்க எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளை கஷ்டப்படுத்தும் நோக்கில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ 10ல் கண்ட சங்கதிகள் உண்மைக்கு எதிரானவை என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.